**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 10 |
| நாள் | : | 20.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | காசிலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது துணை காவல் கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 27.12.2021 அன்று ஆர்.கே.பேட் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு.சதாசிவம் என்பவர் திரு.முனுசாமி என்பவர் கொடுத்த புகாரை பெற்று ஆர்.கே.பேட் காவல் நிலைய குற்ற எண்.656/2021 பிரிவு 302 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புகார் **அ.த.சா.ஆ.11** ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.12 ஆகும்.** பின்பு என் பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு சம்பவம் இடமான ஆர்.கே.பேட் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட ஐயனேரி சண்முகம் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் வாடகைக்கு கொலையுண்ட மங்களா என்பவர் டைலர் கடை முன்பாக இடத்தை 14.30 மணிக்கு சாட்சிகள் வெங்கடேன், ருத்தரவேல் முன்னிலை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.13** மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ.14 ஆகும்.** மேலும் சம்பவ இடததில் அதே சாட்சிகள் முன்னிலையில் ரத்தம் தொய்ந்த மேட் மற்றும் ரத்தம் தொயாத மேட் ஆகிவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அது **அ.த.சா.ஆ.15**

**ஆகும்.** மேட்கள் ஆகியவை **சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகும்.** புகார்தாரான முனுசாமி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த விக்னேஷ், சரவணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த இடத்திலிருந்து சாட்சி அய்யப்பன், மற்றும் மோகனா ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சோளிங்கர் அரசு மருத்துவமனை சென்று விபத்து பதிவேட்டை பார்வையிட்டு முதல் சிகிச்சை அளித்த மருத்துவர் பாலாஜி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்த பதிவேடு **அ.த.சா.ஆ.16 ஆகும்.** வாலாஜ பொது அரசு மருத்துவமனைக்கு சென்று பினவரை முன்பு வைக்கப்பட்டிருந்து கொலையுண்ட மங்களா என்ற பிரேதத்தின் மீது சாட்சிகள் கார்த்தி, நரசிம்மன், சேகர், ஸ்ரீனிவாசன் மற்றும் அருண்குமார் ஆகியோர் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்பும் மாலை 16.00 மணியிலிருந்து 18.00 மணி வரை பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.17 ஆகும்.** இறப்பிற்கான உண்மையான காரணம் அறிய தலைமை காவலர் 1985 சின்னதுரை என்பவர் மூலம் பிரேதத்தை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் ருத்தரவேல், வெங்கடேசன், சண்முகம், ஐய்யப்பன் ஆகியோர்களையும் பிரேத விசாரணைக்கு சாட்சிகளாக இருந்த நபர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மறுநாள் சம்மந்தப்பட்டஎதிரியை தேடி வரும் போது கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் 28.12.2021 அன்று காலை 6.40 மணிக்கு அம்மையார் குப்பம் ஆந்திர பஸ் நிறுதத்தில் நின்றுகொண்டிருந்த எதிரி தமிழ்மணியை கைது செய்து, அங்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகள் அண்ணாமலை, மோகன் ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானாக முன்வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதனை காலை 7.00 லிருந்து 8.00 மணிக்குள் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையெழுத்து பெற்று பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.18 ஆகும்.** மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி பயன்படுத்திய இரு சக்கர வாகனம் பதிவு எண்.TN 20 BD 4342 என்ற

வானத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.19 ஆகும்.** பிறகு வீரானத்துர் கிராமத்தின் அடியில் உள்ள முட்புதரில்மறைத்து வைத்திருந்த கத்தியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றேின். அந்த கைப்பற்றுதல் **அ.த.சா.ஆ.20 ஆகும்.** எதிரி மற்றும் தடைய பொருட்களுடன் காவல் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பிறகு அன்யை தினமே கைப்பற்றப்பட்ட வழககின் தடைய சொத்துக்களை பகுபாய்விற்காக படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் பிறகு 17.02.2022ம் அன்று சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் விக்னேஷ் மற்றும் சரவணன் ஆகியோர்களை Crpc 164 வாக்குமூலம் பதிவு செய்வதற்காக பள்ளிப்பட்டு குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுபடி சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பிறகு பிரேத பரிசோதனை செய்த வாலாஜபாத் அரசு மருத்துவமனை சேர்ந்த மருத்துவர் சித்ரா மற்றும் விபத்து பதிவேடு செய்து மருத்துவர் பாலாஜி–யை ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு உடல் உட்கூற்றாய்வு செய்த மருத்துவர் கிருஷ்ணதங்கசுடர் என்பவரை மற்றும் மருத்துவர் குகன், தடஅறிவியல் துறை முத்துலட்சுமி ஆகியோரை தனித்தனியோ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு பவானி தடஅறிவியல் துறை என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு காவல் நிலைய காவலர் முருகன், சின்னதுரை ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே போல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சதாசிவத்தையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு விசாரணை முடிந்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்வதற்காக கருத்தறை பெற வேண்டி குற்றவியல் உதவி இயக்குநர் அவர்களிடம் கருத்துறை பெற்று பணிமாறுதல் சென்றுவிட்டபடியால் மேற்கண்ட கோப்பினை அப்போது ஆய்வாளர் வெங்கடேசனிடம் ஒப்படைத்துவிட்டேன். மேற்கண்ட ஆய்வாளர் அவர்கள் மிண்டும் சாட்சியிடம் விசாரணை செய்யாமல் அதுவே

போதுமானதாக இருந்ததால் மேற்கண்ட கோப்பில் இருந்து அனைத்து ஆவணங்களை சரிபார்த்து இறுதி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார். அவருடைய கையொப்பம் எனக்கு தெரியும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.